செ.வெ.எண்:47 நாள்:27.07.2021

## பத்திரிக்கை செய்தி

## புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம்(NEEDS)

## ரூ.5 கோடி வரை நீட்ஸ் திட்டம்

தமிழக அரசு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மேம்படவும், புதிய தொழில் நிறுவனங்கள், முதல் தலைமுறை தொழில் முனைவோர் மூலம் ஏற்படவும் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம்( NEEDS) செயல்படுத்தி வருகிறது.

இந்த திட்டம் மாவட்ட தொழில் மையம் மூலமாக அனைத்து மாவட்டங்களில் செயல்படுகிறது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் பட்டம், பட்டயம், ஐ.டி.ஐ. தொழிற்கல்வி படித்த முதல் தலைமுறை தொழில் முனைவோர் தொழில் தொடங்கிட இந்த திட்டத்தின் மூலம் வசதி செய்யப்பட்டுள்ளது. உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த ரூ.10லட்சம் முதல் ரூ.5கோடி வரையிலான தொழில் திட்டங்களுக்கு 25 சதவீத (அதிகபட்சம் ரூ.50 லட்சம்) அரசு மானியத்துடன் கூடிய வங்கி கடன் உதவி வழங்கப்படும்.

## வட்டி மானியம்

கடன் பெறுபவர்களில் பொது பிரிவனர் 10 சதவீதமும், சிறப்பு பிரிவினரில் பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், முன்னாள் ராணுவத்தினர், மாற்றுத்திறனாளிகள் திருநங்கைகள் ஆகியோர் 5 சதவீதம் சொந்த முதலீடு செய்ய வேண்டும். தவணை தவறாமல் கடனை திருப்பி செலுத்தும் தொழில் முனைவோர்களுக்கு கூடுதல் சலுகையாக 3 சதவீதம் வட்டி மானியம் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற வயது, பொதுப்பிரிவினருக்கு 21 வயது முதல் 35 வயதிற்குள் இருக்க வேண்டும். சிறப்பு பிரிவினர்களுக்கு 21 வயது முதல் 45 வயது வரை இருக்கலாம். கடனுக்கு விண்ணப்பம் செய்பவர்கள் தமிழகத்தில் குறைந்தது 3 ஆண்டுகள் வசிப்பவராக இருக்க வேண்டும்.

## பயிற்சி விலக்கு

இந்த திட்டத்தின் கீழ் 2021ம் ஆண்டு செப்டம்பர் 30ம் தேதி வரை வழங்கப்படும் கடன் திட்ட பயனாளிகளுக்கு தொழில் முனைவோர் பயிற்சியில் இருந்து தமிழக அரசால் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே பயன் பெற ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் www.msme.online.tn.gov.in/needs என்ற இணைய முகவரியில் விண்ணப்பித்து பயன்பெறலாம்.

மேலும் இது தொடர்பான விபரங்களுக்கு நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் அவர்களை 8925533969 என்ற எண்ணில் அணுகி பயன்பெறலாம் என **மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**